09-09-2025.
O.S.No. 161/2022
வா. சா. 1 நிஜார் அகமது அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் பி.இ.படித்துள்ளேன். நான் 1983ம் வருடத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றி வந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் வெளியூர்களில் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். வெளியூர்களில் பணியாற்றி வந்ததால் என்னுடைய தாய், தகப்பனாரை 1ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நானும் பராமரித்து வந்தேன். வாதசாஆ.1 13.2.1976ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவாச்சொத்தும், தெற்குரத வீதியில் உள்ள சொத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்குரதவீதியில் உள்ள வீட்டை தாவாச்சொத்தாக காட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் ஆதியில் கே.எம்.எஸ்.மீரா மைதீன் எனது பாட்டனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவாச்சொத்தையும், தெற்குரதவீதியில் உள்ள வீட்டையும் வாதசாஆ.1ன்படி என் தாய் தந்தைக்கு தானசெட்டில்மெண்டாக எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சர்வே எண்.TS.No.222, 221/1 என்பதை வீட்டைக்குறிக்கும் என்றால் சரிதான். தாவாச் சொத்திலும், தெற்குரதவீதியில் உள்ள வீட்டையும் வாதசாஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி ஆளுக்குப் பாதி என்றால் சரியல்ல. இரண்டு பேரும் பொதுவாக அனுபவித்துக்கொள்ளவேண்டுனெ உள்ளது. அந்த சொத்தில் என் தகப்பனாருக்கு எவ்வளவு பங்கு என்றால் என் அம்மாவின் தகப்பனார் என் அம்மாவிற்கும் மருமகன் என்ற

முறையில் என் அப்பாவிற்கும் எழுதிக்கொடுத்துள்ளார். வாதசாஆ.1 ஆவணத்தின்படி என் தகப்பனாருக்கு தாவாச்சொத்திலும் வீட்டிலும் எவ்வளவு பங்கு என்பது எனக்குத் தெரியாது. 3.11.1998ம் தேதி என் தகப்பனார் காலமானார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் வாரிசாக என் தாயார் ஜெயினம்மாள், நான், 1,2 பிரதிவாதிகள், என் சகோதரர் ரபீக் அகமது, 3ம் பிரதிவாதியின் மனைவியான என் சகோதரி ஜமால் பாத்திமுத்து ஜோகரா ஆக 6 பேரும் என் தகப்பனாருக்கு வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். என் சகோதரிக்கு 1979ம் வருடம் திருமணமாகி திருச்சியில் செட்டிலாகிவிட்டார் என்றால் சரிதான். நான் 1983ம் வருடத்திலிருந்து வெளியூரில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். அதனால் தாவாச்சொத்தையும், வீட்டையும் 1ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். தேவைப்படும்போது வரி கட்டுவதற்கு நானும் பணம் கொடுத்துள்ளேன். சொத்தில் ஏற்படும் சேதம், மராமத்து ஆகியவற்றை 1ம் பிரதிவாதி அவரது சொந்த செலவில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. சொத்திலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு செய்தார். என் சகோதரர் ரபீக் அகமது எங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரிதான். அவரை பிரதிவாதியாக காட்டவில்லை என்றால் சரிதான். அவர் சொத்தை வேண்டாம் என விடுதலைபத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார். அதனால் அவரை பிரதிவாதியாக காட்டவில்லை. 7.7.2008ம் தேதியிட்ட எனது அண்ணன் ரபீக் அகமது எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரம் ஜெராக்ஸ் நகல் வாதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்பத்திரம் அசல் என் சகோதரரிடம் உள்ளது. வாதசாஆ.2 ஆவணமானது எனது தாயார் 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதியின் மனைவியாகிய என் சகோதரி,

வாதியாகிய எனக்கு, 2ம் பிரதிவாதி ஆகிய 5 பேருக்கும் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எனது சகோதரர் ரபீக் அகமது தாவாச்சொத்திலும், வீட்டிலும் 1/6 பங்கை விடுதலை செய்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதசாஆ.2 ஆவணமானது வாதசாஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் என் தகப்பனாருக்குள்ள பாதி பாகத்தில் என் சகோதரருக்குரிய 1/6 பங்கை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனாருடைய பாதி பங்கைப் பொறுத்துதான் என் சகோதரர் 1/6 பங்கை விடுதலை செய்து எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களிலும், வீட்டிலும் என் தாயாருக்குரிய பங்கு பாத்தியத்தைப்பொறுத்து 13.03.2013ம் தேதி வாதசாஆ.3 மூலம் 1,2 பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தைப்பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பற்றி என் தாயார் இறந்த பின்னர்தான் எனக்கு தெரியவந்தது. தாவாச்சொத்தில் என் தாயாருக்குரிய 6/12, என் சகோதரர் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தின் மூலம் என் தாயாருக்கு கிடைத்த 1/12, என் தகப்பனார் காலமானதால் என் தாயாருக்கு கிடைத்த 1/12 ஆக மொத்தம் 8/12 பங்கு பாத்திய சொத்துக்களை வாதசாஆ.3 மூலமாக 1,2 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்திலும் வீட்டிலும் 10/12 பங்கு 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிராதில் என் தாயார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லத் தக்கதல்ல என பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு பதில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தெற்குரதவீதியில் உள்ள வீட்டில் என் தகப்பனாருக்குரிய பாதி பங்கைத்தான் எல்லோரும் சேர்ந்து என் சகோதரிக்கு 7.7.2008 ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் T.S.No.221/1 குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. குடியிருப்பு வீட்டில் என் தாயாருக்குரிய பங்கான 8/12 ஆகியவற்றை பொதுவாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் தாயார் இறந்தபிறகு மேற்படி வீட்டில் என் சகோதரர் ரபீக் அகமதுக்கும் பங்கு இருப்பதால் அவரை இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் என்றும் மேற்படி சொத்தும் இவ்வழக்கில் சேர்க்கப்படவேண்டிய சொத்தும் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் 2/7 பங்கு கோரியிருப்பது தவறு என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் எனக்கு 1/12 பங்குதான் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் பாகம் கேட்டு 1,2 பிரதிவாதிகளுக்கு பதிவு தபால் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகளிடம் பங்கு கேட்டது கிடையாது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் பார்த்துள்ளேன். கடை எண்.37 ஏ, 37 பி சொத்துக்கள் சம்மந்தமாக 23.06.2007 ம் தேதி என் சகோதரிக்கு எந்தவித தானபத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த கடை கட்டிடங்களையும் என் சகோதரி அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கடைகளை என் சகோதரியும், 3 முதல் 5 பிரதிவாதிகளும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ.2 ஆவணத்தில் மேற்படி கடைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் சகோதரிக்கு

23.06.2007 ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் அது காலாவதியானதால் வாதசாஆ.2 ஆவணத்தில் குறிப்பிடவில்லை. 23.06.2007 ம் தேதியிட்ட வாய்க்கராலான தானசெட்டில்மெண்ட் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லியுள்ள பங்கு விகிதங்கள் சரியல்ல என்றால் தவறு. தாவாச்சொத்தில் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் 1/12 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கும் 1/12 பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து 10/12 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனவே என் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

இவ்வழக்கை கே.எம்.எஸ்.மில் சம்மந்தமாக மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் 23.08.2020 ம் தேதி இறந்தார் என்றால் சரிதான். என் தாயார் இறந்ததன் அடிப்படையில் நான், 1,2 பிரதிவாதிகள், விடுதலை எழுதிக்கொடுத்த என் சகோதரர் ரபீக் அகமது, இறந்துபோன என் சகோதரி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். வாதசாஆ.1 ஆவணத்தின்படி தாவா மில்லும், தெற்குத்தெரு வீடும் தானமாக என் அம்மா, அப்பாவிற்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் 1998 ம் வருடம் காலமானார். என் அப்பா இறந்த பின்னர் என் அப்பாவுக்குரிய பங்கில் அவரது வாரிசுதாரர்களாகிய என் அம்மா, நான், என் சகோதரர்கள், சகோதரி ஆகியோர்கள் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருக்கும்வரை அச்சொத்தை பொதுவாக அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாதசா1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.09.09 15:39:22 +0530

Principal District Judge,
Dindigul.